UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
24-12-1986
PERIODICAL DIVISION
LIBRARY

விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 9 ர. ஆகிர் 21 இதழ் 313
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-12-1986

## திருச்சியில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி; 15 பேர் காயம்

### ரயில் பெட்டிகள் சேதம்

(சென்னை)

திருச்சிக்கருகே உள்ள ரயில் நிலையமொன்றில் குண்டொன்று வெடித்ததில் ரயில் பிரயாணி ஒருவர் பலியானதுடன் பதினைந்து பேர் பலத்த காயத்திற்குள்ளாகினர்.

திருச்சியிலிருந்து நேற்றுக் காலை சரு+ புறப்பட்ட ரயில் முத்திரசன் ரயில் நிலையத்தில் மற்றொரு ரயிலை எதிர் பார்த்து நின்ற வேளையிலேயே குண்டொன்று பலத்த சத்தத்துடன் வெடித்தது. மேற்படி சம்பவத்திலேயே பிரயாணி ஒருவர் கொல்லப்பட்டும் மற்றும் 15 பேர் பலத்த காயத்திற்கு உள்ளாகியுமுள்ளனர். ரயில் பெட்டிகளும் ரயில் நிலையமும் பலத்த சேதமடைந்தது.

இதேவேளை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகையாக ஐயாயிரம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## ● பார்த்தசாரதியின் யோசனைகள்:

# நிராகரிக்கப்பட்டமையே ராஜினாமாவுக்கு காரணம்

புதுடில்லி, டிச-23

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மேற்கொண்டுவரும் புதிய முயற்சிகளில், இந்திய வெளிவிவகாரத் துறையின் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. ஜி பார்த்தசாரதியின் யோசனைகள் நிராகரிக்கப்பட்டதும் பரிசீலிக்கப்படாததுமே அவரின் ராஜினாமாவுக்குக் காரணமென்று இந்திய அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இனப்பிரச்னையை பேச்சுக்கள் மூலம் தீர்க்கும் பொருட்டு பல தடவைகள் இலங்கை அரசுடன் பேச்சுகள் நடத்திய திரு பார்த்தசாரதி இல் தமது யோசனைகளையும் திட்டங்களையும் இந்திய அரசிடம் உடனுக்குடன் தெரிவித்து வந்த போதும் நாளடைவில் அ...வ

(8ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

சென்னை. டிச: 23

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இன்று முதல் சகல ரயில், பஸ் போக்குவரத்துகளும் பலத்த சோதனையிடப்படுவதுடன் பிரயாணிகளும் சோதனையிடப்படுவர் என மாநில அரசின் உள்துறைச் செயலர் திரு. ரி பி. வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் மற்றும் இவற்றின் போக்குவரத்து பாதைகளிலும் பாதுகாப்பு நடவடிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் கடற்கண்ணிவெடியில் சிக்கிய படகு சேதம்; படையினர்பலி!

### தமிழீழ இராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

ஊர்காவற்றுறை கடலில் ரோந்து வந்த கடற்படையினர் மீது தம்மால் நடாத்தப்பட்ட கடற்கண்ணிவெடித் தாக்குதலில் கடற்படையினர் கொல்லப்பட்டதாக தமிழீழ இராணுவம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

ஊர்காவற்றுறை மேற்கு பகுதி இடைப்பை நோக்கி வந்த காரைநகர் முகாம் கடற்படை படகு ஒன்றில் ஆறு கடற்படைவீரர் ரோந்து வந்தபோது தமிழ்ஈழ இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கடற் கண்ணி வெடிக்கு இலக்

(5-ம் பக்கம் பார்க்க)

## போராளிகள் தேடிய நபர் முகாமில் சரணடைந்து மரணத்தை தழுவினர்

மாவிட்டபுரம், செவ்

இராணுவ முகாமில் சரண்புகுந்த நபர் ஒருவர் அங்கு மரணத்தை தழுவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் ஹோட்டல் ஒன்று நடத்திவந்த எஸ். சிவலிங்கம் என்பவர் சில தினங்களுக்குமுன் காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் இராணுவமுகாமில் சரணடைந்ததாகவும் அவர் போராளிகளால் தேடப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

இராணுவ முகாமில் தண்ணீர் கேட்ட இந்நபர் தண்ணீர் கொடுத்தபோது தலை உடைத்து தமது உடம்பில் ஏற்றி தற்கொலைசெய்து கொண்டதாகவும் கூறப்படுகின்ற போதும் இதுபற்றி ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை வடக்கு - கிழக்கு இணைப்பை அரசு அனுமதிக்காது

கொழும்பு. செவ்

இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பான எந்தவொரு நிலைக்கும் இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்திய இணையமைச்சர்களுடனான சந்திப்பில் இலங்கை அரசாங்கம் இதுதொடர்பான தனது நிலையை கூறியுள்ளதுடன் பிரச்னை தீர்வுக்கு ஒருபோதும் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு ஏற்படுவதை அனுமதிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

(5ம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் சீருடையில் உட்புகுந்த கோஷ்டியினர் 3 வீடுகளில் ஒரே இரவில் கொள்ளை

வவனியா, செவ்வாய்

இராணுவ சீருடையணிந்து நவீன ஆயுதங்கள் சகிதம் இரவு வேளையில் உட்புகுந்த இனந்தெரியாத கோஷ்டியினர் வவனியாவிலுள்ள மூன்று வீடுகளில் நகை பணம் உட்பட பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வவனியா மன்னார் வீதியிலுள்ள வவனியா தெற்கு தமிழ்ப்பிரிவு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஞானப்பிரகாசம் மாவட்ட பிரஜைகள் குழு முக்கியஸ்தர் மயில்வாகனம் இளைப்பாறிய தபாலதிபர்

(5-ம் பக்கம் பார்க்க)

## நத்தார் தினத்தில் வன்செயல் இல்லை

கொழும்பு, செவ்:

நத்தார் பண்டிகை காலத்தில் தீவிரவாதிகள் வன்செயலில் ஈடுபடமாட்டார்களெனத் தான் நம்புவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு.

(5ம் பக்கம் பார்க்க)

## 87ஐ சமாதான ஆண்டாக்க 'லலித்' முயற்சி

கொழும்பு, சவ்.

அடுத்தஆண்டைச் சமாதான ஆண்டாக அமைக்கச் செய்வதற்குக் கடந்தவாரம் இடம்பெற்ற இருதரப்பு வீரர்களினதும் பரிமாற்றம் பெரிதும் உதவும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்தவாரம் இரண்டு இராணுவத்தினரையும் விடுதலை செய்ததன் அடுத்த கட்டமாகவே தான் இந்த முறையில் வன்செயல்களைக் கைவிட வேண்டுமென்று கேட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(இ)


# பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany
★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

(A 3263)


## நடைபவனியாக வந்த இராணுவத்தினர் வேலிகளை பிடுங்கி நாசம் புரிந்தனர்

(மாவிட்டபுரம் நிருபர்)

பலாலியிலிருந்து காங்கேசன்துறைக்கு நேற்று நடைபவனியாக வந்த இராணுவத்தினர் வீட்டு வேலிகளைப் பிடுங்கி நாசம் செய்தனர்.

பலாலி - காங்கேசன்துறை இராணுவ முகாம்களுக்கிடையில் நடந்துவந்தபோதும் இராணுவத்தினர் எவ்வித சலசலப்புமின்றி வந்து செல்வது வழக்கம்.

ஆனால் நேற்று மதகுவை அண்மித்ததும் அருகேயுள்ள வீடுகளின் வேலிகளைப் பிரித்து அவற்றின் ஊடாக ஆரவாரமாக சென்றமை மக்களைப் பரபரப்பில் ஆழ்த்தியது.

இதற்கிடையில் வீட்டு வளவுகள் ஊடாக வந்த இராணுவத்தினர் அங்கு நின்ற பழமரங்களில் பழவகைகளைப் பறித்து உண்டபடி சென்றனர்.

இராணுவ வருகையால் மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை பகுதிகளில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒன்றரைமாத கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு நோய் தடுப்பு ஏற்றி வளர்ப்பதற்கு ஏற்ற நல்லஇன பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் விபரங்களுக்கு: கோனல் இராமநாதன் அயோத்தி, பலாலி வீதி, கோண்டாவில். C 6487

இறைச்சிக்கான சேவல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆ கனகலிங்கம் 36, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். C 6497

முரசுமோட்டை பழைய கமத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன வசதியுள்ள இரு போகம் செய்கை பண்ணக் கூடிய 8 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. தேவையானோர் உடன் தொடர்புகொள்ளவும் K சிவஞானம் புத்தூர் மேற்கு, புத்தூர். C 6495

Broiler இறைச்சிக் கோழிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, [நல்லூர் வீடியோ சென்ரர்] 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C 6402]

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

இறக்குமதி செய்யப்பட்ட 1 வருடம் பாவித்த Double Door குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: நந்தகுமார் 32/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். G 6500

பழைய தட்டச்சு இயந்திரம், மீன் தொட்டி, சைக்கிள் (றலி Speaker Box ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. ஹரிஹரன் என்ரபிறைஸ் 337, பலாலி ரோட், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி யாழ்ப்பாணம். C 6476

கோண்டாவில் இருபாலை வீதியில் இராசபாதை சந்தியில் 5 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. Ari Shunmuganathan No 246, Point Pecro Road, Irupalai Junction or Daini Cool Bar Irupalai Junction. C 6507

T. S ஒலிப்பதிவு செய்யப்பட்ட கஸெட் - பண்டிகைக் காலத்து விலைகுறைப்பு ஒரு கஸெட் ரூ. 29/- மாத்திரம். (I) கிறிஸ்மஸ் பாடல்கள் (II வெங்கடேசப் பெருமாள் சுப்ரபாதம், திருப்பள்ளியெழுச்சி திருப்பல்லாண்டு, திருமஞ்சனம் (நீராட்டல்), ஆழ்வார்கள் அருளியவை ஆண்டாள் பாசுரம் - Dr. சேலம் ஜெயலட்சுமி பாடியவை. ஓரே கஸெட்டில், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23631( C 6503)

## விற்பனைக்கு

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 24055 [A3307]

மெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C 6365)

கட்டுடையில், பிரதான வீதிக்கு அருகாமையில் 7 பரப்புக் காணியும், வீடும், கிணறு மின்சாரவசதியுடன் தென்னை, மாமரம், பலா மற்றும் பிரயோசனங்களுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு: மு. திருநாவுக்கரசு உபதபாற் கந்தோருக்கு அருகாமையில், கட்டுடை, மானிப்பாய் C 6491

கணித/விஞ்ஞான உதவி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி பொது அறிவும் பொது உளச்சார்பும் விலை 47/50 பூபாலசிங்கம், சிறீலங்கா புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் மொத்தமாகப்பெற அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 166/1 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். C6449

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மற்றைய நிறுவனங்களிலும் பார்க்க வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் முன்). C 6434

## சேவை

135 M M. கலர் பிலிம் சுருள்கள் எதுவானாலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75 Proce sing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

"போட்டோஸ்ரட்", 'ஸ்ருனியோ' பிரதிகளைத் தரமான காகிதத்தில் தெளிவான முறையில் பெற்றுக்கொள்ள: கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொ. பே. இல: 22824. (C 3336)

## தேவை

பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத மருத்துவ கலவையாளர் உடன் தேவை. பயிற்றப்படாதவர்கட்கு பயிற்சி அளிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: நிருவாகி. த மெடிக்கல் சென்றர், ஆனைக்கோட்டை. C 6471

நல்ல நிலையில் உள்ள அல்லது புதிய Beling Electric ovan உடன் தேவை தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: ச இராசசேகரம் அரசினர் வைத்தியசாலை, செல்லிப்பழை. A 3372

சொந்தக்காரரிடமிருந்து நல்ல நிலையிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர் தேவை: தொடர்பு:- J. P T Ltd, 3, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். (C-64 7)

## வகுப்புக்கள்

Advance Level 89, 88 இரசாயனம், பௌதிகம், தூய கணிதம் பிரயோக கணிதம் கற்பிக்கப்படும் B Sc. (Cey ) 85 சிவன்கோவிலடி, திருநெல்வேலி. C 6447

Radio, T V. வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டோர் மெக்கானிசம், தட்டெழுத்து. சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு:- Vispa Engineering Hall, 328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (C-6502)

Spoken English புதிய பிரிவுகள் திங்கள், புதன். வெள்ளி காலை 6மணி — 7மணி 9மணி 10மணி ஆரம்பம்: 29-12 86 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். C-6483

## கண்டெடுக்கப்பட்டது

சோதிரெக்ஸ்ரைல்ஸில் தவறவிடப்பட்ட பணம் இருக்கின்றது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். சோதி ரெக்ஸ்ரைல்ஸ் 14, நவீன சந்தை யாழ்ப்பாணம், C 6490

## பெயர் மாற்றம்

இல 9, பலாலி வீதி, 1ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்து வந்த T. யோகராசா ஆகிய நான் எனது பெயரை T. முகம்மது ஹிஸான் என மாற்றியுள்ளேன் (T Mohamed Hissan) இனிமேல்எல்லா ஆவணங்களிலும் T.முகம்மது ஹிஸான் என்றே கையெழுத்திடுவேன் என இவ்வறிவித்தல் மூலம் பகிரங்கப் படுத்துகிறேன்.

இப்படிக்கு,
T. முகம்மது ஹிஸான்
(T Mohamed Hissan)
C 6488

## கல்வி

புதிய பாடத்திட்டப்படி 5ம் வகுப்பு (6ம் ஆண்டு) மாணவர்கள் கல்லூரியில் சேர ஜனவரி கடைசி வாரம் நடைபெறும் பிரவேசப் பரீட்சைக்கு துரித வகுப்பு 1986-12-26 வெள்ளிக்கிழமை முப 10மணிக்கு ஆரம்பமாகிறது 35 வருட ஆசிரிய அனுபவம் கொண்டவரால் கற்பிக்கப்படும் நேரில் சமுகம் தரவும். அன்பு மாலைப் பாடசாலை 42, பிரப்பங்குள ஒழுங்கை, யாழ்ப்பாணம் C 6505

## மணப்பந்தல்

வெளிநாட்டில் அரசாங்கத் தொழில்புரியும் உயர் இந்து வேளாள மணமகளுக்கு அதே இனத்தைச் சேர்ந்த தீயபழக்கங்கள் அற்ற 30-35 வயதிற்கிடைப்பட்ட எஞ்சினியர், டாக்டர், விஞ்ஞான பட்டதாரி, தொழில் நுட்பவியலாளர் போன்ற மணமகனை உறவினர் எதிர்பார்க்கின்றனர். வெளிநாடு செல்ல விரும்புபவர் விரும்பத்தக்கது சீதனம் மற்றும் விபரங்களை நேரில் அறிந்துகொள்ளலாம் விளம்பர இல C6470 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 6470

## இடமாற்ற அறிவித்தல்

13, 14 பெரிய கடையில் இயங்கிய ஜி எஸ். லிங்கநாதன் அன் கோ. ஸ்தாபனம் 79, கே. கே. எஸ். வீதி M O சன்ஸ் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.**

[C 6428]

## இலங்கை நூலகச் சங்கம்

### 1987ம் ஆண்டு

### முதல் வருட நூலக வகுப்புக்கள்

**25-1-87ல் ஆரம்பம்**

★ தகைமை

க. பொ. த. உயர்தரத்தில் நான்கு பாட சித்தியும் (ஒரு தடவையிலல்ல, சாதாரண தரத்தில் ஆங்கில பாட சித்தியும்

அல்லது

உயர்தரத்தில் மூன்றுபாட சித்தியும், சாதாரண தரத்தில் ஆங்கில பாடசித்தியும், இரண்டு வருட நூலக வேலை அனுபவமும்

அல்லது

நூலக ஊழியராயின், சாதாரண தரத்தில் ஆறு பாட சித்தியும் மூன்றுவருட அனுபவமும், ஆங்கில மொழி மூல வேலைத்திறன் அறிவும்.

விண்ணப்பப் படிவங்களுக்கு (10/-)
3-1-87 க்கு முன் தொடர்புகொள்க:

**கா. மாணிக்கவாசகர்,**
177, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்,

இறுதி-இடைநிலைப் பரீட்சை: 1987 பங்குனி
முதல் வருடப் பரீட்சை: 1987 ஆனி (C6464]

## தேவை

கருணாநிலயம் - கிளிநொச்சியிலுள்ள இக்தாபனத்தில் பின்வரும் இடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1 அதிபர் - கிறிஸ்த சேவைக்கு தம்மை அர்ப்பணிக்க விரும்பும் 35 வயதுக்குமேற்பட்ட குடும்பப் பொறுப்பற்ற ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புகள் வைத்துக் கொள்ளக்கூடிய ஒருவர் விரும்பத்தக்கது. தளபாடங்களுடன் தனி வங்களாவுடன் தகைமைக்கேற்ற வேதனமும் தரப்படும்.

2 தையல் - மனையியல் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்.

விண்ணப்பங்கள் 8-1-87 இன் முன் சேர்க்கப்பட வேண்டும்

கனம் சாம் டி ஹோர்சிங்டன்,
குருமனை சென். யேம்ஸ் ஆலயம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C 6486)

வீடியோ ஸிஹொன்ஸ்
சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
நாடுங்கள்
353C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
VIDEO Sihons

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு ஆயுதம் வழங்கிய முக்கிய நபர்கள்

# இருவருக்கும் மன்னிப்புவழங்க ரீகன் மறுப்பு

வாஷிங்டன், டிச. 23

**ஈரானுக்கு ஆயுதம் வழங்கப்பட்டது தொடர்பான ஊழலில் முக்கிய நபர்களாகக் கருதப்பட்ட இருவருக்கு மன்னிப்புவழங்க அமெரிக்க ஜனாதிபதி திரு. ரீகன் மறுத்துவிட்டார்.**

அமெரிக்க தேசிய பாதுகாப் புச்சபையின் முன்னாள் உறுப்பினர்களான அட்மிரல் பொயின்டெஸ்டரும், அவரது உதவியாளரான கேர்ணல் ஒலிவர் நாத்துமே மேற்படி ஊழலில் சம்பந்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர்களாகும்.

மேலும் ஈரானுக்கு ஆயுதம் வழங்கியது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலும் இவர்கள் இருவரும் பதிலளிக்க மறுத்து விட்டனர்.

இதனிடையே முன்னாள் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ரொபேட் மெக்ரல்லேன் இந்த ஆயுத விற்பனை விவகாரத்தில் ஜனாதிபதி ரீனும் சம்பந்தப்பட்டுள்ளார் என்று குற்றம் சாட்டியுள்ளார். (எ)


## மன்சேற்று - 200

### பங்கசு கொல்லி




**பிரதான உபயோகம்:-**

இது உருளைக்கிழங்கு, மிளகாய், தக்காளி, கோவா, செலரி, கரட், பீட்ரூட், சலாது போஞ்சி, நெல், வெங்காயம், நிலக்கடலை, முந்திரிகை, ரோசா, ஒக்கிட் மற்றும் அழகுக்காக வளர்க்கப்படும் பயிர்கள் ஆகியவற்றைப் பீடிக்கும் நோய்களான முன்வெளிறல், பின் வெளிறல், அக்கிரக்னோஸ், ஒல்டனேரியா, இலைப்புள்ளி நோய், பவுடர் மில்டிவ் பூசண நோய், சேர்க்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் ஆகிய பங்கசு நோய்கள் பலவற்றை முற்றாக அழிக்கின்றது.

சில்லறை விலை: 500 கிறும் 80/- ரூபா.

**லங்கெம் விவசாயிகளின் தோழன்**

விபரங்களுக்கு:-

திரு. V. வடிவேல்,

லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,

219, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,

(A-3344) தொலைபேசி: 23454


## பார்த்தசாரதி ராஜினாமா

டிசம்பர், டிச 23

இலங்கை இனப்பிரச்னையை பேச்சுவார்த்தைமூலம் தீர்ச்சும் பொருட்டு ஆரம்பகாலம் தொடக்கம் முக்கிய பங்காற்றிய திரு. ஜி. பார்த்தசாரதி இந்திய மத்திய மந்திரி சபையின் கொள்கை ஆலோசனை குழுவின் தலைவர் பதவியிலிருந்து நேற்று ராஜினாமா செய்தார்.

திரு. பார்த்தசாரதியின் ராஜினாமாவை இந்தியப் பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதேவேளை அவரது ராஜினாமா குறித்து எதுவித காரணமும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

## சர்வதேச மாநாடு

புதுடில்லி, டிச 23

பதினைந்து நாடுகளைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் மற்றும் கலைஞர்கள் அன்னை இந்திரா காந்தியின் நினைவாக தை மாதம் 12ம் திகதி இன்று புதுடில்லியில் ஆரம்பிக்கவிருக்கும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நுட்பம், வளர்ச்சி, நாகரிகம் குறித்து இந்த மாநாட்டில் ஆய்வு மேற்கொளளப்படும்.

'புதிய தொடக்கத்தை நோக்கி' என்ற பெயரிடப்பட்டுள்ள மேற்படி மாநாட்டை இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி ஆரம்பித்து வைப்பார் (எ)

## இந்திராகாந்தி பரிசு

புதுடில்லி, டிச 23

நாட்டின் அமைதி, படைக்குறைப்பு மற்றும் வளர்ச்சிப்படி ஆகியவற்றிற்கான இந்திரா காந்தியின் பரிசுக்குரிய வெற்றியாளரை தீர்மானிப்பதற்கான சர்வதேச நடுவர் குழு தைமாதம் 27-ம் திகதி புதுடில்லியில் கூடவுள்ளது.

இப்பரிசுக்கான தொகை பதினைந்துலட்சம் ரூபாவாகும். (எ)


## பிரயாண ஒழுங்குகள்

★ **லிபியா:-**

ஒயில் கொம்பனி பெப்பிரவரி 1987ம் வருடம் 16-ம் திகதிக்கு மேல் பயணம் தொடங்குகின்றது. 200 வேலையாட்கள் தேவை. செல்ல விரும்புவோர் வேண்டிய ஆவணங்களை எம்மிடம் சமர்ப்பிக்கவும்.

★ **சவுதி அரேபியா:-**

கிளீனேஸ் - 25 வயது முடிந்தவர்கள்மட்டுமே எடுக்கப்படுவார்கள். 200 பேர் தேவை. உடன் வந்து சந்திக்கவும்.

★ **குவைத்:-**

பணிப் பெண்கள் - 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் உடன் நேரில் வரவும்.

★ **டுபாய்:-**

பணிப்பெண்கள் - 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மட்டும்.

★ **குவைத்:-**

ஹவுஸ் றைவேஸ் - வயது 18—35 வரை.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும். சகலரும் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,**

பிரசாந்தி வைத்திய நிலையம்,

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,

உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள நியூ லிங்கம் சலூன் ஒழுங்கையால் வரவும்.

(A-3262)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

நியாயமே வலிமை என்ற
உறுதி நமக்கு இருக்கவேண்டும்
— ஆபிரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## கராச்சி, புதுடில்லி, கொழும்பு இனக்கலவரம் இருந்தவாறே!

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய தீவிரவாதிகளின் ஆயுதப்போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பாகிஸ்தானின் ஒத்துழைப்பை இந்திய அரசாங்கம் நாடியிருக்கின்றது.

சீக்கிய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சி பெறுவதையும், அங்கிருந்து ஆயுதம் கடத்தவதையும், எல்லைப் பகுதிகளில் ஊடுருவல் செய்வதையும் தடுக்கும் நோக்கத்துடன் இந்திய உள்துறை செயலாளர் திரு. சி. ஜி. சோமையா பாகிஸ்தான் உள்துறை செயலருடன் பேச்சுக்கள் நடத்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

இப்பேச்சுக்கள் மிகவும் திருப்தியளிக்கும் விதத்தில் முன்னேற்றம் கண்டிருப்பதாக திரு. சோமையா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பஞ்சாபில் சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஊக்கமும், உதவியும் அளிப்பதன் மூலம் இந்தியாவின் கட்டுக்கோப்பையும் ஒருமைப்பாட்டையும் குலைப்பதற்கு பாகிஸ்தான் அரசு முயன்றுவருவதாக அண்மைக்காலம் வரை குற்றஞ்சாட்டி வந்துள்ள இந்தியஅரசு இந்த விடயங்கள்குறித்து நேரடியாகவே பேச்சு வார்த்தைகள் நடத்த நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத் தக்கது.

இதனால் வீண் சந்தேகங்கள் தீர்வதுடன் இருநாடுகளுக்குமிடையிலான பூசல்களை ஓரளவுக்குத் தணிப்பதற்கும் உதவக்கூடும்.

சிந்து மாகாணத்தில் குறிப்பாக கராச்சிப் பகுதியில் மூண்டுள்ள இன மோதல்களினால் பெரும் அரசியல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் பாகிஸ்தான் அரசு இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் அமைதியின்மைக்கு தொடர்ந்தும் தூபம் போட்டுக்கொண்டிருப்பதில் நம்பிக்கை இழந்திருக்கும் என்று கருத இடமுண்டு.

கராச்சியில் கடந்த சில தினங்களாக நடைபெற்றுள்ள மோதல்களில் சுமார் 200 பேர்வரை கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பஷ்டூன் - மொஹஜிர் இனங்களுக்கிடையே ஏற்பட்ட இந்த இனக்கலவரங்களில் உயிரிழப்புகள் ஒருபுறமிருக்க சொத்துக்களும் உடைமைகளும் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. எரியும் நெருப்பில் மனிதர்களைத் தூக்கி எறிந்து கொலைசெய்யும் மிக கொடூரமான அளவுக்கு அங்கு இனக்குரோதங்கள் உக்கிரமடைந்திருந்ததாகவும், அமைதியை நிலைநாட்ட அழைக்கப்பட்ட ராணுவத்தோடும் கூட மோதல் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் அதனால் ஏற்பட்ட வன்செயல்களையும் பெரிதாக முன்பக்கத்தில் போட்டு மகிழ்ச்சியடைந்த கொழும்புப் பத்திரிகைகள் கராச்சி இனக்கலவரங்களை அவ்வளவாகப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. பஞ்சாப்பில் சீக்கியர்அல்லாத பஸ் பிரயாணிகள் அண்மையில் சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து புதுடில்லியில் மூண்ட கலவரங்களைப் பெரிதுபடுத்திக்காட்டிய அளவுக்கும் கூட கராச்சி செய்திகள் பெரிதாகப்படவில்லை அவர்களுக்கு.

என்னதான் நல்லெண்ண முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டிருந்த போதிலும் இவர்கள் இந்தியாவின்பால் நட்புப்பாராட்டத் தயங்குகிறார்கள் என்பதே இதன் கருத்து.

ஒரு நாட்டின் அமைச்சர்கள் அனைவருமே முழுமையாக பதவி துறக்கும் அளவுக்கு மோசமாக நடந்துள்ள இனக்கலவரங்கள்- அவை பாகிஸ்தானில் என்பதால் இங்கே பெரிதுபடுத்தப்படவில்லை

பாகிஸ்தானின் நட்பும், அதன் மூலமாக ஆயுதங்களும் கிடைத்து வரும்வரையில் இந்த நிலை நீடிக்கவே செய்யும்

இது இவ்வாறு இருக்க பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ள இன வன்முறைகளையடுத்து மந்திரி சபையிலிருந்து 22 அமைச்சர்களும், 12 இணை அமைச்சர்களும் ராஜினாமா செய்திருக்கும் செய்தியானது ராஜதந்திர வட்டாரங்களில் பெரிய விஷயமாகக் கருதப்படவில்லை. ஏனெனில் மந்திரி சபைக்குப் பொறுப்பான பிரதம மந்திரியானவர் இதுபற்றி அலட்டிக்கொள்ளவேயில்லை. ராஜினாமா செய்துள்ள அமைச்சர்கள் அனைவருமே மீண்டும் வெவ்வேறு அமைச்சர் பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

ராணுவ சர்வாதிகாரம் நிலைத்துள்ள ஒருநாட்டில் இதைத் தவிரவேறு எதைத்தான் எதிர்பார்க்கமுடியும்?

சிலவேளை இப்பொழுதுள்ள ஓரளவு சிவில் நிர்வாகத்தையும் கூட இரத்துசெய்து விட்டு ஜெனரல் சியாவுல் ஹக் மீண்டும் முழு ராணுவ சர்வாதிகாரியாக அறிவித்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

கராச்சி இனக்கலவரங்கள் ராணுவ ஆட்சியாளர்களுக்குத்தான் சாதகமாக இருக்கும் போல் தெரிகின்றது.

## சரஸ்வதி ஐ. நாணய சங்கம்

யாழ்ப்பாணம் புதன் கைதடி மேற்கு சரஸ்வதி ஐக்கிய நாணய சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. நா. கந்தையா தலைமையில் கைதடியில் நடைபெற்றது.

பின்வருவோர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொன். செல்லையா, செயலாளர்: திரு. பூ. தர்மலிங்கம், பொருளாளர்: திரு. க. ரஞ்சன், ஆகியோருடன் ஏழுபேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்திற்குக் கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. எஸ். சிவலிங்கம், கிராம சேவையாளர் திரு. ச. ரவீந்திரன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். (ஒ)

# எதிர்ப்பை உதாசீனம் செய்து திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழரை சிறுபான்மையாக்கினர்

(நேற்றைய தொடர்ச்சி)

இப்பொழுதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் 22 (1)ம் பிரிவு கூறுவதாவது:

''ஸ்ரீலங்கா முழுவதும் உத்தியோக மொழியே நிர்வாக மொழியாக இருக்கும் ஆனால் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்திற்கும் புது பதிவேடுகள் வைத்திருப்பதற்கும் பொது ஸ்தாபனங்களால் செய்யப்படும் தொடர்புகளுக்கும் தமிழ் மொழியும் பாவிக்கப்பட வேண்டும்''

இதிலிருந்து ஒரு தமிழ் மொழிவாரிப் பகுதியோ பிரதேசமோ ஒரு புதிய கோட்பாடு அல்லவென்றும் சரித்திர ஆசிரியர்களாலும் சிங்கள அரசியல் தலைவர்களாலும், ஒவ்வொரு அரசாங்கங்களாலும் முறையே குறிப்பிடப்பட்டும் ஏற்கப்பட்டதுமாகும்.

ஒவ்வொரு அரசும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பை உதாசீனம் செய்து திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களின் மூலம் கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதிகளில் அவர்களை சிறுபான்மையாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

காரியாதிகாரி உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படும் போது மொழி அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டனர். அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள பகுதிகளுக்கு தமிழ் பேசும் உத்தியோகத்தர்களான முஸ்லிம் அல்லது தமிழர்களே தெரிவு செய்யப்பட்டனர். அதே போன்று சிங்களம் பேசும் பகுதிகளில் (மேல்நாடு கீழைநாடு) ஆகிய பகுதிகளுக்கு சிங்களம் பேசும் உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டனர் இதிலிருந்து நிர்வாக வேலைகளுக்குக் கூட ஒரு மொழிவாரிப பிரதேசம் அங்கீகரிக்கப்பட்டது. உள்ளூராட்சி நிர்வாகம் கூட மூன்றாகப் பிரிக்கப்பட்ட 'C' பிரிவு வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் புத்தளப் பகுதியையும் 1971ம் ஆண்டு வரை கொண்டிருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு வடக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள மக்களின் விகிதாசாரத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

1946ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிங்களவரின் விகிதாசாரம் 5 % திருமலையில் 15 3% வடக்கு மாகாணத்தில 2% ஆனால் கிழக்கு மாகாணத்துல் முழுமையாக 8 4% வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்த்து பார்க்கும் பொழுது 4% சிங்களம் பேசும் மக்களும் மிகுதி 95 6% தமிழ் பேசும் மக்களும் ஆவர். இந்த நிலை அரசாங்கங்களின் திட்டமிட்ட குடியேற்றத்திட்டத்தினால் மாற்றப்பட்டது.

திருகோணமலையில் உள்ள சிங்களம் பேசும் மக்களின் விகிதாசாரம் 1827ல் 1 3% ஆக இருந்தது. அதன்பின்பு 1946ல் 15 3% ல் இருந்து 1953ல் 18 2% ஆக உயர்ந்தது 19 3ல் 29 6ஆகக்கூடி 1981ல் 33 95% ஆக உயர்ந்தது.

மேற் கூறப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு தமிழ்த் தாயகம் இருந்தது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் செயல்பட்ட அரசு தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புக்கும் மத்தியில் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் குடிசன அமைப்பை மாற்றிய தன் பின்பு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஓர் தமிழ் பேசும் பிராந்தியம் அல்ல என்ற வாதத்தை ஏற்க முடியாது.

இவ்வளவு குடியேற்றங்கள் நடந்து முடிந்த பின்பும் கூட வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 1981ல் உள்ள சிங்களவரின் விகிதாசாரம் 13 2% ஆகும். தமிழ் பேசும் மக்களின விகிதாசாரம் 86 87% ஆகும்.

உலக நாடுகளில அரசியல் தீர்வு காணும் பொழுது குடியேற்றப் பட்டவர்களை குடியகற்றும் முறையும் புதியதொன்றல்ல

பகுதிகளில் சிறுபான்மையராக இருப்போருக்குக் கொடுக்கப்படலாம்.

எனவே தமிழ் தேசிய இனத்தை எப்போதாவது ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணமிருந்தாலன்றி ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எவரும் ஒரு தமிழ் பேசும் மொழி வாரிப்பகுதியை எதிர்க்க முடியாது மொழி வாரிப் பகுதிகளை அங்கீகரிப்பதன் மூலம் அமைதியும் சமாதானமும் ஏற்படுமேயொழிய முரண்பாடோ அல்லது கலகமோ ஏற்படாது

அத்துடன் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு தாயகம் அத்தியாவசியமானதுமாகும். ஏனெனில் 1956, 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில்

**இ. பாலசுப்பிரமணியம்**
(சட்டத்தரணி)

எது எவ்வாறுயினும் 1981ம் ஆண்டில் குடிசன மதிப்பு அறிக்கையின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்பேசும் மக்களின் விகிதாசாரம் 86 8%. 1946ம் ஆண்டில் குடிசனமதிப்பு அறிக்கையின்படி தமிழ்பேசும் மக்களின் விகிதாசாரம 95 6% எனவே வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒரு தமிழ் பேசும் மக்களின் மொழிவாரிப் பிராந்தியமென்று கொள்வதற்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்க முடியாது. அதே நேரத்தில் 1946ல் 4 4% ஆக இருந்தது 1981ல் 13 2% ஆக மாறிய தமிழ்மொழி பேசாத மற்றைய மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படலாம்.

சிங்களப்பகுதிகளான மற்றைய மாவட்டங்களில் பெருந்தொகையான தமிழ்பேசும் மக்களும் உள்ளனர். ஒரு பகுதியில் சிறுபான்மையராக இருப்போருக்கு கொடுக்கப்படும் பாதுகாப்பு மற்றைய பெரும்பான்மையினத்தால் தமிழர்கள் தாக்கப்பட்ட பொழுது வடக்குக் கிழக்குப் பகுதிகளான தங்கள் பாரம்பரிய தேசத்துக்கே பாதுகாப்புக்காக ஓடிச்சென்றார்கள். இதிலிருந்து ஒரு தமிழ்த் தாயகம் தாமாகவே இருந்து வந்தது புலப்படுகின்றது.

சுவிற்சலாந்து தேசத்தில் கன்றன்ஸ் (Cantons) உருவாக்கப்பட்டபொழுது தாயகங்கள் அமையக்கூடிய முறையில் ஆக்கப்பட்டன ஆனால் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை இத் தமிழ்த்தாயகம் பாரம்பரியமானது. 1921ம் ஆண்டில் 97 8% தமிழ்பேசும் மக்களைக் கொண்டதாகவுள்ளது. அதற்கு முன்பதாக தமிழ் அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. எனவேதான் திரு- எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களும்

(5-ம் பக்கம் பார்க்க)

★ இன்று ராஜாஜி - ஈ.வே. ரா நினைவுதினம்.

**ராஜாஜி**

இமயத்தால் கங்கையினால் உயர்பண் பாட்டால்
இவ்வுலகம் போற்றிடு தத் துவங்கள் தம்மால்
சமயத்தால் தனித்து நின்ற பழைய தேசம்
தளைப்பட்ட நிலைகண்டே வாழ்வு முற்றும்
தமதுயர்ந்த அறிவதனால் தியாகம் தன்னால்
சலிக்காதே முயன்றிட்ட தத்வ ஞானி
அமையுமுயர் நூலனைத்தும் கற்ற ஆசான்
அறிவுடையோர் வணங்கும் ராஜ ஜி தாமே

★ ★

''என்மூளைக் களஞ்சியமே இவர்தா'' மென்றே
இயபி வைத்தார் மகாத்மாவும் இவரைப் பார்த்தே
தென்னாட்டில் பிறந்திட்டார் காங்கிரஸின்
செழிப்புக்குக் காலமெலாம் உழைத்தல் செய்தார்
பொன்னான பாரத ராமா யணங்கள்
புவித்தலத்தோர்க் கிலகு நடை தன்னில் தந்தார்
எந்நாளும் நல்லோரின் உளத்தில் வாழும்
எழிலான ராஜ ஜி என்னும் மேலோர்

★ ★

**ஈ. வே. ரா**

சாதிகுல பேதங்கள் தீங்கே என்றார்
தட்டிப்பார் பகுத்தறிவால் எதையும் என்றார்
நீதியினைக் காணது துடிப்போர்க்காக
நெடுஞ்சிறையில் பலகாலம் வாடலானார்
மேதினியின் நன்மைக்கே உழைத்தா ரேனும்
வெறுத்திட்டார் சட்டசபைப் பதவி தன்னைச்
சேதிசெய்யும் இன் முகத்துத் தாடி வேந்தர்
ஈ வே.ரா என்கின்ற தியாக சீலர்

★ ★

சோக்கிறட்டீஸ் என்கின்ற ஞானி போலச்
சொல்லம் பால் தமிழ்க்குலத்தை விழிக்கச் செய்தார்
ஆக்கங்கள் பல ஈந்த அண்ணா தம்மை
அவருடைய அருமைமிகு தம்பி யாரை
'நேசக்குலக்கள் திராவிடர் தம் உயர்வை என்றே
நுண்ணறிவால் தூண்டிவிட்ட ஆற்றல் மிக்கோர்
தேக்குடமாய்த் திகழ்ந்திட்டார் யாருக் கென்றால்
சிந்திக்கத் தெரிந்திட்டோர் தமக்குத்தானே.

- ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்ப்பை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டித் தலைவர்களும் ஒரு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்தை ஏற்கக்கூடிய முறையில் நடத்து வந்துள்ளனர். எனவே இணைப்பு என்ற சொல் பொருத்தமற்றதாகும். இத்தமிழ்த் தாயகம் கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தான் போலல்லாது தொடர்ச்சியாகவுள்ளது.

இணைப்பு என்ற பதம் எப்பொழுது எழும் என்றால் இந்தியாவில் இருந்து மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்களின் தாயகக் கோரிக்கையொன்று பரிசீலனை செய்யப்படுமானால் இணைப்பு என்ற பதம் அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்த் தாயகத்தையும் மலைநாட்டிலுள்ள தமிழ்த் தாயகத்தையும் இணைப்பதா? என்ற பதம் உபயோகிக்கப்படலாம்.

தமிழ்பேசும் மக்களாகிய மலைநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்கள் கோரிக்கை ஒன்று எழுமானால் நுவரேலியா மாவட்டத்தைப் பரிசீலனை செய்யும்பொழுது இக்கோரிக்கை முக்கியமான தொன்றாகக் கவனிக்கப்பட வேண்டும். சுவிற்சர்லாந்து நாட்டின் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் கன்ரன்ஸ் (Cantons) எப்படி நிறுவப்பட்டனவோ அதேவகையில் அத்தியாவசியமானதாகக் கருதி இங்கும் ஒரு தாயகத்தை அமைப்பது சரியானதே.

இந்தியத் தமிழர்கள் மலைநாட்டில் 150 வருடங்களுக்கு மேலாக வசிக்கிறார்கள் நுவரேலியா மாவட்டத்தில் அவர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். நுவரேலியா மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரம் பின்வருமாறு:- 1946-ல் 59.3% 1953 ல 61.4%, 1971 ல் 53 3%, 1981 ல் 60 8%

அப்படியாக இந்தியத் தமிழர்களின் நன்மைக்காக ஒரு தாயகம் அமைக்கப்பட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ்ப் பிரதேசமும் நுவரேலியா மாவட்டத்திலும் அதன் சுற்றுவட்டாரத்திலுமுள்ள இந்தியத் தமிழ்ப் பிரதேசமும் ஒன்றிணைந்து ஒரு மொழிவாரிப் பிரதேசமாக (தாயகம்) அமைய வேண்டுமா. என்று ஆராயும்போது தான் "இணைப்பு" என்ற பதம் பொருத்தமாகும்.

மேலே விரிவாக எடுத்துரைக்கப்பட்ட விபரங்களின்படி இந்நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு ஒவ்வொரு தேசிய இனத்துக்குமுரிய நிலம் மொழி, கலாசாரம் ஆகியவை அங்கீகரிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது எனவே பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த தமிழ்பேசும் மக்களின் தாயகத்தை அவர்களுக்கு மறுப்பது இயற்கைநீதிக் கோட்பாடுகளுக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் முரணானது.

இத்தமிழ்த் தாயகத்திலேயுள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் தங்கள் அபிலாசைகளுக்கேற்பவும் அவர்களது உரிமை பேணிக் காக்கப்படக்கூடிய முறையிலும் இந்தத் தாயகத்தில் எவ்விதமான நிர்வாகம் பரவலாக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யல் மேயொழிய தமிழ்பேசும் மக்கள் அல்லாதவர்கள் தங்கள் கருத்தைத் தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கமுடியாது.

## நத்தார்தினத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நத்தார் தினத்தில் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று ஏற்படுவதை வரவேற்பதாக இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இவ்வியக்கத்தின் வடபகுதியின் உபதலைவர் ரஹீம் ராய்ட்டர் நிருபருடன் தொலைபேசி மூலம் உரையாடிய போது இத்தகவலை வெளியிட்டதாகவும் இவ்வானொலிச்செய்தி மேலும் தெரிவித்தது. (சி)

## போராளிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் மரணமானது குறித்து உறவினர்களுக்கு இராணுவம் அறிவித்ததை யடுத்து அவர்கள் இதுபற்றிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். [எ]

## ஆயுதங்களுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் வீட்டிலேயே மேற்படி சம்பவம் கடந்த திங்களன்று இரவு இடம் பெற்றது.

ஒவ்வொரு வீட்டிலும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தபணம், நகை, பொருள்கள் என்பன கொள்ளையிடப் பட்டுள்ளன. [எ]

## கடற்கண்ணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காகி படகு முற்றாக சேதமடைந்ததுடன் அதில் வந்த கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.

இதனை தொடர்ந்து முகாம் திரும்பிய படையினர் ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொண்டனர் எமது பதில் தாக்குதலுக்கு ஈடுகொடுக்காத படையினர் பின்வாங்கினார்கள். [ஓ]

## பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை தீவிரப்படுத்துவதற்கு விஷேட பிரிவுகள் ஏற்படுத்துப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

சென்னையில் நடைபெற்ற போக்குவரத்து வாகனங்களினதும், பாதைகளதும் பாதுகாப்பு குறித்து கூட்டத்தில் திரு வெங்கட்ராமன் இதனை தெரிவித்துள்ளார். (சி)

## வடக்குக்கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இவர்களது சந்திப்பின்போது பரிமாறப்பட்ட இருதரப்பு யோசனைகளடங்கியசகல அறிக்கைகளையும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தியிடம் இணையமைச்சர்கள் நேற்றுக்கையளித்தனர். (சி)

## இன்றைய பலன்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: ஆணவப் பேச்சினால் நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்கள். தவறுகள் நடக்கலாம். எதையும் நிதானித்து செயல் படுத்தவும்.

மீனம்: கணவன் மனைவி உறவு பலப்படும் புதிய நண்பர்கள் சேர்க்கையுண்டு புதிய தொழிலும் முன்னேற்றமடையும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## நத்தார் விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம், தமது அங்கத்தவர்களுக்கும். சிறுவர்களுக்கும் வருடாந்த நடாத்தும் 'நத்தார் விழா' நிகழ்ச்சியை இம்மாதம் 30-ம் திகதி சிறப்பாக நடாத்தவுள்ளது.

சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும், 'கரோல்' இன்னிசைகளும் இம்முறை சிறப்பாக நடைபெறவிருப்பதாக மேற்படி சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். ராஜசிங்கம் தெரிவித்தார். (வி)


### வேம்படி மகளிர் கல்லூரி
### ஆண்டு 6 (வகுப்பு 5)

மேற்படி வகுப்புக்கான அனுமதிப்பரீட்சை கல்வித் திணைக்களத்தினால் 31-12-86 நடைபெறும். ப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்கனவே விண்ணப்பித்தோர் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

அதிபர்
(337 )



### பிரயாண ஒழுங்கு

'யூனிவேர்சல் ஏஜென்சி'
ஸ்தாபனத்தாரின்
பணிவானவேண்டுகோள்

இவ்வருட முடிவில் எமது வரவு செலவுக் கணக்கைப பூர்த்தி செய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

அதையிட்டு எமது காரியாலயத்திலும், எமது உப-ஏஜென்சியுடனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பு கொண்ட அனைவரும் இம்மாத முடிவுக்குள் நீங்கள் தொடர்புகொண்ட விடயம் பற்றியும், உங்கள் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரத்தையும், எமது காரியாலயத்திற்கு வந்து தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்திடம் கடன் பெற்றுச் சென்றோரின் பொறுப்பாளர்களும் தவறாது வந்து தொடர்பு கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 1987ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான எமது பிரயாண ஒழுங்குகளின் விபரம்:

★ லிபியா
ஒயில் கம்பனி வேலையாட்கள்
(150 வெற்றிடங்கள்)

★ சவுதி அரேபியா
கிளீனேர்ஸ் OPEN VISA வயது 26-40
(160 வெற்றிடங்கள்)

★ குவைத்
ஏற்கனவே எம்முடன் தொடர்புகொண்டவர்களுக்கு மட்டும்.

பிரயாண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங்
என்பனவும் உடனுக்குடன் செய்து
கொடுக்கப்படும்.

இத்துடன் நத்தார், புதுவருட
வாழ்த்துக்களையும்
தெரிவித்துக்கொள்கிறோம்,

Universal Agencies
(யூனிவேர்சல் ஏஜென்சி)
125, [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்-பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு) முன்பாக
[A 3265)



### கடைசி நேர வரி விளம்பரம்

விற்பனைக்கு

பாவனையில் இருந்த T V. டெக் மோட்டார் சைக்கிள், மேசைக்காற்றாடி. ஐஸ்கிறீம் மேக்கர் (1 கலன்), மிக்சர், கசட் றேடியோ, அலடின் லாம்பு. ஆங்கில தட்டச்சு விற்பனைக்குண்டு பைலட் சென்ரர், 151, செம்மணிவீதி, நல்லூர் (முத்திரைச் சந்தியில் இருந்து 300 மீற்றர்) C-6503

இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது
லிடோ
10-30, 2-30, 6-30
மோகன் - சுஹாஷினி
மூர்த்தி நடித்த
நெஞ்சத்தைக்
கிள்ளாதே
கலர் (புதிய பிரதி)
நத்தார் வெளியீடு
ஆகாயத் தாமரைகள்
(புதிய வெளியீடு)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 4.30, 6-30
ஆண்களை காதல் கேளிக்கைகளில் ஈடுபடுத்தி நினைத்ததை முடிப்பதில் அவள் வல்லவள். மயிர்கூச்செறியும் சண்டைகள் நிறைந்த
Samantha Fox
in
TOO HOT TO HANDLE
Action, Thrill, Sex
(Strictly Adults only)



### இலங்கையில் முதல் ஒடியோகிளப் ஆரம்பித்த ஒரு வருட நிறைவை முன்னிட்டு

நியூ விக்ரேஸ்
நத்தார், புதுவருட
மலிவு விற்பனை

★ சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்கள் (ரூபா 15/- முதல் 200/- வரை)

★ பாடல்கள் பதித்த ஒடியோ C 60 மக்சல் கசற் (ரூபா 29/50)

(புதிய சினிமாப் பாடல்கள் ஒலி 1 முதல் 90)
(பழைய " " " 1 " 69)
(பக்திப் பாடல்கள் " 1 " 53)
(கதை வசனங்கள் " 1 " 30)
நாதஸ்வரங்கள், கச்சேரிகள்,
நகைச்சுவைகள் இன்னும் பல

முடிவு:- 1-1-87

நியூ விக்ரேஸ்,
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23532
[A-3258]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடா நாட்டில் தொடர்ந்தும் சேவையை நடத்துகிறோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## பிரயாண ஒழுங்குகள்

*டென்மார்க் *கனடா
*லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

**சவூதி, குவைத்**

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

**சிங்கப்பூர், குவைத்**

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC
## TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி; யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக (A 3223)

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. ஈடு./6177

மாவிட்டபுரம் கதிர்காமர் கந்தையா —வழக்காளி

எதிராக

பலாலி
1. சீனியர் துரைசிங்கமும் பெண்
2. நாகம்மவும்,
3. சிதம்பரன் வேலனும் பெண்
4. இலட்சுமியும்.

ஈடு /6177 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை (12 1-1987 முற்பகல் 10-00 மணி தொடக்கம் எனக்களித்த அதிகாரத்தின்படி அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை**

முதல் வட்டி ரூ 40 000/- மேலும் இதில் ரூ. 20,000/-க்கு 9-5-1985 தொடக்கம் 12-2-1986 வரைக்குரிய வருடமொன்றுக்கு 60% வீதவட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 12% வீதவட்டியும் வழக்குச் செலவு ரூ. 5771/40சதம் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை 'மூடவிராக்கன்சீமா' நிலப்பரப்பு இரண்டு (2) 'முடவிராக்கன்சீமா' நிலப்பரப்பு ஒன்று 1 குழி (9 5) ஒன்பது தசம் ஐந்தும். இவ்விருதுண்டுக்காணிகளும், இப்போ ஒருதுண்டுக்காணியான 'முடவிராக்கன்சீமா' நிலப்பரப்பு மூன்று (3) குழி (9'5) ஒன்பதுதசம் ஐந்து விடும் வடக்குப்புறமாக இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும், இதற்கு எல்லை கிழக்கு செல்லப்பொடியினுதனம். வடக்கு மாரிமுத்து பெண் அன்னமுத்துவினுதனம், மேற்கு கிராமசபை ஒழுங்கை. தெற்கு ஆழ்வார் செல்வனினுதனம் இதடிங்கலும்.

வ. சி. மகாதேவன்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
ஏலவிற்பனவாளர்.

553, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
19-12-86 (C 6496)

# மீண்டும் இலங்கையில்

# லோர்ஸ்பேன்* 40 ஈசி

## குளோர்பைரிபோஸ் 40%




எச்சரிக்கை:- எல்லா பீடை நாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

## விவசாயிகளின் முதல் தேர்வு

# பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்.

| | |
|---|---|
| 100 மி.லீ. | - ரூ. 55/- |
| 200 மி.லீ. | - ரூ. 98/- |
| 500 மி.லீ. | - ரூ. 215/- |
| 1 லீட்டர் | - ரூ. 420/- |

ANGLO-ASIAN GROUP AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன்
பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

* அமெரிக்க டௌ கெமிக்கல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



திரு. பொன்னையா துரைசிங்கம்
(உரிமையாளர் 'திருமகள் ஸ்ரோர்ஸ்')
தோற்றம்: 30-3-1932
மறைவு: 17-11-1983
திதி: 24-12-1986

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் என்றென்றும் எங்களுக்கு வழிகாட்டியருளவும் வேண்டி நிற்கிறோம்.

**அன்பின்**
மனைவி, பிள்ளைகள்;
வேலணை,
புளியங்கூடல். (C 6489)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
பொன்னர் இராசம்மா
(கனகபை வீதி மானிப்பாய்)
தோற்றம்: 18 8-1933
மறைவு: 24-11-1986

அம்மா என்றழைக்கையிலே அன்புக் குரல் கொடுப்பாய் அன்னையே! அருஞ்சுடரே! அணையா ஒளிவிளக்கே! இம் மாநிலத்தின் நாம் கண்ட தெய்வம் நீ! இணையேதுமில்லாத இனிய நல் தாயும் நீ! எந்நாளும் எம்மை உன் அன்புச் சிறகினுள்ளே மூடிவைத்துக் காத்தவளே முத்து மணிச் சரமே! இந்நாளில் உன் பிரிவைத் தாங்க முடியாமல் எந்நாளும் நாம் அழுவோம் இறைபடியில் நீ உறங்கு! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அவரின் ஈமக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
கணவன், மக்கள், தாய்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (C 6482)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அம்பலவாணர் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்

விடுக்கும்

### பகிரங்க அறிவித்தல்

இலங்கைத் தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபனத்தால் விநியோகிக்கப்படும் அப்பியாசக் கொப்பிகள் தாராளமாக எம்மால் விநியோகிக்கப்படுகின்றன. வியாபாரிகள் தமது தேவைகளைப் பதிவு செய்தால், பதிவின் அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

– நிர்வாகிகள்.

கடந்த ஐந்தாண்டு காலமாக, யாழ்ப்பாணத்தில் பாடசாலை உபகரணங்களுக்கு செயற்கைத்தட்டுப்பாடு நிலவினாலும். எம்மிடம் எல்லாமே நியாயவிலையில் கிடைத்திருக்கிறது. உங்கள் தேவை எதுவானாலும் வழங்கத் தயாராக இருக்கிறோம்.

★ பாடசாலை உபகரணங்கள் ★ அப்பியாசக் கொப்பிகள்
★ காரியாலய பாவனைப்பொருட்கள் ★ அன்பளிப்புப் பொருட்கள்
★ மின் அலங்காரப் பொருட்கள் ★ மின்சார உபகரணங்கள்
★ போட்டோஸ்ரட் உபகரணங்கள்

அனைத்துக்கும் எம்மை நாடுங்கள்

மொத்த சில்லறை வியாபாரிகள் நன்மைகருதி எமது நிறுவனம், 25-12-86 முதல் 15-01-87 வரை சகல விடுமுறை தினங்களிலும் காலை முதல் மாலை வரை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

பொருள் தேடுவோர் எமை நாடுவது வியப்பில்லை:

## அம்பலவாணர் அன் சன்ஸ்

(அங்கீகாரம் பெற்ற முகவர்களும் இறக்குமதியாளர்களும்)

196, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

(A 3374)



★ சகலவிதமான சஞ்சிகைகளுக்கும் 1987-ம், ஆண்டுக்கான புதிய சந்தாதாரர்களாக சேர்ந்துகொள்ளுங்கள்

வட இலங்கையில் 40 ஆண்டுகளுக்கு மேலாக
சகல இந்திய, உள்ளூர் சஞ்சிகைகளின்
முகவர்களாக நாமே இருந்துவருகின்றோம்.

★ 1987-ம் ஆண்டுக்கான புதிய சந்தாதாரர்கள் 31-12-86 வரை ஏற்றுக்கொள்ளப்படுவர்.

சகல நூலகங்கள், தனியார் நிறுவனங்கள், குறிப்பிட்ட திகதிக்குள் சந்தாக்களையோ, ஏஜென்சிகளையோ புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| ★ குமுதம் | ★ கல்கி | ★ துக்ளக் |
| ★ கல்கண்டு | ★ ராணி | ★ ரத்தின பாலா |
| ★ மாலைமதி | ★ ஜெமினி சினிமா | ★ கோகுலம் |
| ★ சினிமா எக்ஸ்பிரஸ் | ★ இதயம் பேசுகிறது | ★ மேகலா |
| ★ ஆனந்தவிகடன் | ★ சாவி | ★ நவரத்தினம் |
| ★ ஜூனியர் விகடன் | ★ மோனா | ★ மங்கையர் மலர் |
| ★ ஞானபூமி | ★ மல்லிகை | ★ மணியன் மாத இதழ் |
| ★ பொய்யாமொழி | ★ சிரித்திரன் | ★ Sports Star |
| ★ வான்நிலா | ★ களம் | ★ Front Line |
| ★ மதுரம் | ★ தாசம் | ★ Hindu |
| ★ பொம்மை | ★ தாயகம் | ★ India Today |
| ★ அம்புலிமாமா | ★ அலை | ★ Time |
| ★ மங்கை | ★ காந்தம் | ★ News Week |
| ★ பேசும் படம் | ★ மூலிகை | ★ Science Today |
| ★ ராஜம் | ★ சோதிட மலர் | ★ Femi a |
| ★ இந்துமதம் அழைக்கிறது | ★ சோதிட பரிபாலினி | ★ Film f re |
| | ★ ஊற்று | ★ Elvis Weekly |
| | | ★ Moscow News |
| | | ★ Women and Home |
| ★ இராமகிருஷ்ண விஜயம் | ★ நான் | ★ Chan ramama |
| ★ ராணி முத்து | ★ கற்பகம் | ★ Star and Style |
| ★ ராணி காமிக்ஸ் | ★ சோதிட வெளியீடுகள் | ★ Astrologial Magazine |

ஏஜென்ட் இல்லாத பகுதிகளுக்கு ஏஜென்டுகள் தேவை.

விபரங்களுக்கு:-

[சஞ்சிகைப் பகுதி]

## பூபாலசிங்கம் புத்தகசாலை,

[THE FINANCE. CO அருகாமையில்]

15/3, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

(A-3333)



### இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா**

(மூன்னாள் யாழ். பல்கலைக்கழகமாணவரவைத் தலைவரும் அகில இலங்கை தமிழ் பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தலைவரும்)

தாயின் மடியில்:- 10-06-1 57

தாயக மண்ணில்:- 24-12-1984

ஆ! எம் செல்வமே நீ என்றும் படிக்கப்போய் வரவில்லையென்றே எம் மனம் எண்ணி எண்ணி வெதும்புகிறது. நாம் உற்று நோக்கின் தான் நீ மடிந்து 2 வருடங்கள் ஆவது எமக்குத் தெரிகிறது

அடா! வன்னி மண்ணிலே பிறந்த நீவன்னி மக்களுக்கோர் காவலனாய் திகழ்ந்து அவர்களின் மகனாகவும் விளங்கி இன்று நம்மிடையே நிரப்புவதற்கரிய ஒரு வெற்றிடத்தை விட்டுச் சென்று விட்டாய் உமது பெற்றோர், சகோதரங்களின் ஆசைகளை எல்லாம் உன் இலட்சியப் பாதைக்குத் தடையானவை என்றெண்ணினாய். மக்கள் துன்பமுறும் நேரங்களில் அவ்விடங்களில் உன் கால்களை நீ பதிக்கத் தவறியதேயில்லை. சிறையில் இருந்து வாடிய பலரை விடுவித்த பின்னர் அந்த அன்னியர்க்கே எதிரியாய் வன்னி மண்ணில் வாளெடுத்துப் போராடிய மன்னனை ஒத்தாய். மக்களை காப்பதே உன் சேவையென எண்ணி உன் தோழர்களுடன் செயற்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அன்னியரின் துப்பாக்கி ரவைகளை மார்பிலே ஏந்தி மடிந்தாய். நீ மடிந்து விட்டாலும் உன் இலட்சியம் ஈடேறும் உனது மறைவின் 2வது ஆண்டுநிறைவை யொட்டி உனது ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

இங்ஙனம்

உன் இலட்சியத்தை காக்க துணிந்த பெற்றோர், சகோதரர்கள், அம்மம்மா, அத்தான், சகோதரிகள், சிறிய தாய்மார், சிறியதந்தைமார், மாமன்மார், மாமிமார், மருமக்கள், மைத்துனர்கள், மைத்துனிகள். பெரிய தந்தைமார், பெரியதாய்மார், உறவினர்கள் மற்றும் உமது தோழர்கள்.

குமுளமுனை, முள்ளியவளை.

(C 6498)


## இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி- 9 (24 - 12 - 86)
கிழமை- புதன்
திதி- அட்டமி
நட்சத்திரம்- உத்தரம்

மேடம்: கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய பேதங்கள் தோன்றும். தன தானிய நஷ்டமுண்டு கடமையும் சீர்கெடும்.

இடபம்: பிதாவழித் தன வரவுண்டு. புதிய உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்படலாம். கைத்தொழில் புரிவோர் பயனடைவர்.

மிதுனம்: இன்று கடமை புரியுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும்.

கடகம்: பதவியுயர்வுக்கு இடமுண்டு துண்டிக்கப்பட்ட உறவு மீண்டும் துளிர்க்கும் வாழ்க்கையிலும் வசந்தம் நிலவும்.

சிங்கம்: இடர்கள் பல தாக்கும். இதயத்தில் அமைதி குன்றும் தொழிலும் மந்த நிலை அடையும்.

கன்னி: நத்தை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். புன்சொற்களால் மனதும் புண்படும் எதையும் பொறுமையுடன் செயல்படுத்தவும்.

துலாம்: குடும்ப சுகமுண்டு குறிக்கோள் வெற்றியுண்டு. சுற்றுவுத்தாகம் மேலிடும்.

விருச்சிகம்: அலை மோதும் எண்ணங்களால் மனதும் புண்படும் சிறிய விஷ பயமுண்டு. பிரயாணத்தைப்பின் போடவும்.

தனுசு: படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள். சிலர் புதுமனை கட்டுவதற்கும் ஆலோசிப்பர். தொழில் நலனுமுண்டு

மகரம்: புத்திர வழியாலும் நற்செய்திக்கிடமுண்டு நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். தொழில் துறையிலும் நன்மையுண்டு.

(5ம் பக்கம் பார்க்க)


### 31-ம் நாள் நினைவஞ்சலி



**திரு. வேலுப்பிள்ளை தியாகராஜா**

[இளைப்பாறிய தபால் அதிபர்]

தோற்றம்: 17-11-1909

மறைவு: 24- 1-19 6

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தெய்வமே எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"லக்ஷ்மி வாசா", சுதுமலைவடக்கு, மானிப்பாய்

(C 6499)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

24 12 86 புதன்கிழமை

## வவுனியா தடைமுகாமை பயணிகள் வாகனம்

# எந்நேரமும் கடந்து செல்லலாம்

## —பிரிகேடியர் அறிவிப்பு

[வவுனியா நிருபர்]

"இன்று முதல் வவுனியாவிலுள்ள தடை முகாம்களைக் கடந்து எந்நேரமும் பிரயாணிகள் தனியார் பஸ்வண்டிகள், இ. போ. ச. பஸ் வண்டிகள் என்பன செல்லமுடியும். அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்"

இவ்வாறு வன்னிமாவட்டப் பாதுகாப்புப் படைப் பிரசும அதிகாரி பிரிகேடியர் விக்சில் கொபேகடுவ நேற்று வவுனியாக் கச்சேரி அரச இலாகா தலைமை மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

மேலும் பொதுமக்கள் எந்நேரமும்தடை முகாமைக் கடந்து செல்லலாம் என்று கூறிய அவர், பொருட்களுடன் வரும் தனியார் லொறிகள் மட்டும் இரவு ஆறு மணிக்குப் பின்னர் தடைமுகாமைக் கடந்து செல்ல அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும் அவற்றைச் சோதனையிட வேண்டியுள்ளதால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இத்துடன் மக்களின் பாதுகாப்புக் கருதி மருதானையிலிருந்து வவுனியாவரை ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென்ற வவுனியா பிரஜைகள் குழுத் தலைவரின் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்றார். (எ)

## இதுரூபவாஹினி செய்தி

கொழும்பு, செவ்

முருகண்டியிலுள்ள மின் விநியோகக் கம்பிகளைத் தாங்கும் இரண்டு பாரிய மின்கம்பங்களை அமைந்த தூண்களை தீவிரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளதால் வடமாகாணத்திற்கான மின் விநியோகம் பூரணமாக துண்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ரூபவாஹினி செய்தி நேற்று அறிவித்தது. (ஒ)

## திமுக உறுப்பினர்கள் பதவி விலகல்:

# சபாநாயகரைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(சென்னை)

அரசியல் சாசனத்தின் 17 வது பிரிவின் நகலை பொது இடம் ஒன்றில் தீயிட்டுக் கொழுத்திய தி. மு. க உறுப்பினர்களைப் பதவி விலக்கிய பேரவைச் சபாநாயகர் திரு. பி. எச். பாண்டியனின் செயலைக் கண்டித்து சென்னையில் ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் தி. மு க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள கலைக் கல்லூரியில் இருந்து ஆரம்பமான இந்தக் கண்டன ஊர்வலம், காமராசர் சாலையில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் முடிவடைந்தது.

ஊர்வலத்தின் முடிவில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பேரவையின் சபாநாயகரின் செயலைக் கண்டித்தும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி மு. கவைச் சேர்ந்த திரு டி ஆர். பாலு, முரசொலி மாறன், துரை முருகன். இந்திய கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திரு. மாணிக்கம் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திரு. நல்லசிவம் ஆகியோரும் கூட்டத்தில் பேசினர். (வா)

## கிரிக்கெட்:

## இன்று ஒரு நாள் போட்டி

புதுடில்லி, டிச 24

இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று கான்பூரில் நடைபெறும். (சி)

## புலிகள் அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன்

"வந்தாறு மூலையில் கடந்த மாதம் 27ம் திகதி சமரில் ரோக்களிடம் இடம் பெற்ற நேரடிமோதலில் ஈசன் என்று அழைக்கப்படும் ரட்ணசிங்கம் என்பவர் வீரமரணம் அடைந்தார். அவருக்கு எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்"

இவ்வாறு விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அஞ்சலி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (எ)

## குடும்பஸ்தர் தற்கொலை

முல்லைத்தீவு புதன்

முள்ளியவளையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆ. மகேந்திரன் (வயது 29) என்பவர் குடும்பபிரச்னை காரணமாக நச்சித்திரவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்

இவரின் மரண விசாரணைகளை முள்ளியவளை மரண விசாரணை அதிகாரிகி தியாகராசா நடாத்தினார்

முல்லைத்தீவுமாவட்ட வைத்திய அதிகாரி சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடாத்தினார். பொலிஸ் உத்தியோகஸ்தர் குழந்தைவேலு சாட்சியங்களை நெறிப்படுத்தினார் விசாரணை முடிவில் தற்கொலையென தீர்ப்பளிக்கப்பட்டது

## முல்லைத்தீவில் மூளைக்காய்ச்சல் 4 சிறுவர் பலி

ஒட்டுசுட்டான், புதன்

முல்லைத்தீவுப் பகுதியில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியுள்ளது.

இதனால் கற்சிலைமடு, தண்ணீரூற்று. முள்ளியவளைப் பகுதியில் இதுவரை நான்கு சிறுவர்கள் மரணமடைந்துள்ளார்கள்.

## ஆசிரியர்களின் சம்பளப் பணம் கொள்ளை

கொழும்பு, செவ்-

வத்தளையிலுள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர்களின் சம்பளப் பணம் அறுபதாயிரம் ரூபா இனந் தெரியாதோரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரும், ஏனைய ஆசிரியர்களும் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துவரும்போது அவர்கள் வந்த வாகனத்தை இடைமறித்து ஆட்டோ ரிக்ஷோ ஒன்று நிறுத்தப்பட்டதுடன் அதிலிருந்து இறங்கிய ஒருவர் அதிபரை மிரட்டிப் பணப்பையைப் பறித்துக் கொண்டு வந்த ஆட்டோவிலேயே ஏறி ஓடித் தப்பியுள்ளார்

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. (ஒ)

## பார்த்தசாரதியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புறக்கணிக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது.

இதேவேளை இலங்கை இனப் பிரச்னையை தீர்ப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்த திரு பார்த்தசாரதி இறுதியில் தனது யோசனைகள் கைவிடப்பட்டமை குறித்து கவலை தெரிவித்திருந்தார் என்றும் ஏற்கனவே தமது பதவி விலகல் கடிதத்தை பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்திருந்தார் என்றும் இந்திய அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது இவ்வாறு இருக்க இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி திரு பார்த்தசாரதியின் ராஜினாமாக்கடிதத்தை ஏற்க மறுத்திருந்தார் என்றும் அத்துடன் ராஜினாமாவை வாபஸ் பெறுமாறு கேட்டிருந்தார் என்றும் அறியப்படுகிறது, (சி-எ)

## போக்குவரத்து கஷ்டம்

உரும்பராய், செவ்

பருத்தித்துறைவீதி பாலாலி வீதியை இணைக்கும் நீர்வேலி கரந்தன்வீதி வாகனப் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் சீர்கெட்டுள்ளது யாழ் மாவட்டத்தில் பிரதான உபஉணவு பயிர்செய்கைப் பிரதேசமான இப்பகுதிக்கு ஒரேஒருவீதி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வீதி கடந்தபல வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதால் மழைகாலத்தில் பாரிய குளிகளினால் பிரயாணம் செய்வது கஷ்டமாக வுள்ளது. (வ)

## பல்கலைக்கழக மாணவர்கள் விசாரணையில்

கொழும்பு செவ்

கொழும்பு பல்கலைக்கழக மூன்றும் வருட விஞ்ஞானபீட மாணவன் தயாபத்திரன கொலை தொடர்பாக பத்து பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸ் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்

மேலும் இக்கொலை தொடர்பான சம்பவத்தில் பலத்த காயமடைந்த மாணவன் சோமசிறியின் சாட்சியத்தை தொடர்ந்து இருவரைத்தேடி பொலிஸார் பலத்த தேடுதல் நடத்திவருகிறார்கள். (கி)

## வீதி செப்பனிட 13லட்சம் ரூபா

வவுனியா செவ்

கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் ஓமந்தை நொச்சிக்குளம் மாணிக்கவீதி வீதி 13 லட்சம் ரூபா செலவில் செப்பனிப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் நொச்சிக்குளம் கிராம எழுச்சி திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டதாகும்.

இக்கிராமத்தினைச் சேர்ந்த 55 குடும்பங்களுக்கு 7500 ரூபா வரையிலான நிதிஉதவி வீடுகட்ட வழங்கப்படவுள்ளது என இப்பகுதி விசேட சேவை அலுவலர் மகேந்திரன் தெரிவித்தார். (எ)

# தயாபத்திரன கொலைக்கு 'கைஸ்' கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பு பல்கலைக்கழக மாணவனும் சுதந்திர மாணவ அமைப்பின் தலைவருமான தயாபத்திரன படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தைமாணவ இளைஞர் பொதுமன்றம் வன்மையாக கண்டித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மாணவ இளைஞர் பொது மன்றம் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

1983 யூலை இனக்கலவரங்களின்போது பாதிக்கப்பட்ட மக்களிற்காக தயாபத்திரன ஆற்றிய உதவிகளையும் இந்நேரத்தில் நாம் நன்றியுணர்வுடன் நினைவுகூருகிறோம் இந்த கொலை அரசியற் காரணங்களிற்காகவே செய்யப்பட்டதென நாம் உறுதியாக நம்புகிறோம் தம்மை தீவிர இடதுசாரிகளென வெளிப்படுத்திக் கொண்டு படுபிற்போக்கான இனவாத அரசியல் நடத்துவோரின் அரசியல் வறுமை இக்கொலையில் வெளிப்படுவதை உணரமுடிகிறது

இத்தகைய செயற்பாடுகளை எதிர்த்து மேலும் உறுதியுடன் சுதந்திர மாணவ அமைப்பானது போராடுமென நம்புகிறோம், சுதந்திர மாணவர் அமைப்பு நடாத்தும் முற்போக்கான ஆக்கபூர்வமான போராட்டங்களிற்கு மாணவர் இளைஞர் பொதுமன்றம் தனது பூரண ஆதரவை நல்கும். (ஒ)

## மின்பாவனைதடை

கிளிநொச்சி, செவ்

உருத்திரபுரத்தில் சட்ட விரோத மின்சாரப்பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மின்சாரம் எடுத்து வந்தவர்களது வீடுகள், கடைகள் தொழிற்சாலைகளை முற்றுக்கையிட்ட மின்சாரப்பகுதயினர் மின்சார வயர்களை அறுத்து வீதியில் போட்டு தீவைத்தனர். சட்டவிரோத மின்பாவனையின் கெடுதி பற்றியும் இங்குள்ள பொது மக்களுக்கு விளக்கப்பட்டது.

# வவுனியா அகதிகளுக்கு வீடமைப்பு, விவசாயக் கடன்

வவுனியா திங்கள்.

வவுனியா மாவட்டத்தில் அகதிகளுக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான 20 ஆயிரம் கிலோ உழுந்து விதைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது.

35 கிராமங்களுக்கு விதை உழுந்தினை வவுனியா மாவட்ட சர்வோதய இயக்கம் வழங்கியுள்ளது.

அதேவேளையில் அகதிகளை மீளக் குடியமர்த்தும் திட்டத்தின்கீழ் சர்வோதயம் 500 வீடுகளைக் கட்டிக்கொடுக்கவும் திட்டமிட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சர்வோதய இணைப்பாளர் தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது :-

இளைஞர், யுவதிகளுக்குக் குறிப்பாக வறிய குடும்பத்தினருக்கு விவசாயத்தில் நவீன பயிற்சி அளிக்கப்படும். யுவதிகள் சுயமாக வீட்டுத்தோட்டம் அமைத்து வருமானம் பெறக்கூடியதாக இத்திட்டம் அமையும்.

## மரண அறிவித்தல்

சபாரத்தினம் வித்துவரத்தினம்

(இயக்குனர் சமக்கோன்லிமிட்டெட்)

சுன்னாகம் ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், "சமக்கோன்" நிறுவனத்தின் இயக்குனருமாகிய சபாரத்தினம் வித்துவரத்தினம் கடந்த 21-12-86 ஞாயிற்றுக்கிழமை காலமானார் அன்னார் பத்மராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. பரராசசிங்கம், திருமதி பரராசசிங்கம், அவர்களின் அன்பு மருமகனும், சரோஜினி, பாமா, ராதிகா, ஆகியோரின் அன்புத் தந்தையும், ச.மகேஸ்வரன் சமக்கோன் லிமிட்டெட்), ராஜ்சிறீ பத்மா அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தருமரத்தினம், காலஞ்சென்ற ஜெபரத்தினம், காலஞ்சென்ற ரோகிணிதேவி, காலஞ்சென்ற வைத்தியக் கலாநிதி இந்திரன், சுகுனசோதி, அசோகவதி அவர்களின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-12-86 வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:

ச. மகேஸ்வரன்

C 6515

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49 Telegrame :Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org